
**மார்ச் – 09**

# TNPSC துளிகள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, LCA தேஜாஸ் எனப்படும் இலகுரக போர் விமானத்திற்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த உயிர்காப்பு அமைப்பின் (ILSS) உயர் மட்ட உயரச் சோதனைகளை வெற்றிகரமாக மேற் கொண்டுள்ளது.
- டாடா மோட்டார்ஸ் நிறுவனமானது, மிக நீண்ட தூரப் போக்குவரத்து தீர்வுகளுக்கான அவற்றின் நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்காக என்று, ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் கனரக சரக்குந்துகளின் முதல் சோதனை ஓட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR), ஒரு ஒருங்கிணைந்த மருத்துவத்தில் ஆராய்ச்சிக்கான (RIM) முறையாக கட்டமைக்கப்பட்ட நெறிமுறை சார்ந்த சுகாதாரக் கட்டமைப்பை வழங்குவதற்காக வேண்டி, மனிதப் பங்கேற்பினை உள்ளடக்கிய உயிரி மருத்துவ மற்றும் சுகாதார ஆராய்ச்சிக்கான ICMR தேசிய நெறிமுறை வழிகாட்டுதல் விதிகளின் (2017) பின் இணைப்பை வெளியிட்டுள்ளது.
- மனித கடத்தல் மற்றும் பாலியல் சுரண்டலை எதிர்த்துப் போராடுவதற்காக மார்ச் 04 ஆம் தேதியன்று பாலியல் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திற்கான உலக தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## கால்நடை சுகாதாரம் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்




- மத்திய அமைச்சரவையானது கால்நடை சுகாதாரம் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை (LHDCP) மாற்றியமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தில் தேசிய விலங்கு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் (NADCP), கால்நடை ஆரோக்கியம் மற்றும் நோய்க் கட்டுப்பாடு (LH&DC) மற்றும் பசு ஆஷாதி ஆகிய மூன்று கூறுகள் உள்ளன.

- நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நோய்களைத் தடுப்பதன் வழியாக கால்நடை இழப்புகளைக் குறைக்க LHDCP உதவும்.
- இந்தத் திட்டம் ஆனது, நடமாடும் கால்நடை நல மையங்களின் (ESVHD-MVU) பல்வேறு உட்கூறுகள் மூலம் கால்நடை சுகாதாரப் பராமரிப்பை வீட்டிற்கே சென்று வழங்கும் வசதியினை ஆதரிக்கிறது.
- இது பிரதான் மந்திரி கிசான் சம்ரிதி கேந்திரா மற்றும் கூட்டுறவு சங்கங்களின் வலை அமைப்பு மூலம் கால்நடை மருத்துவத்திற்கான (பசு ஔஷாதியின்) பொதுப் பெயர் மருந்துகள் அதிகளவில் கிடைக்கும் தன்மையையும் மேம்படுத்துகிறது.

## விவித்தா கா அம்ரித் மஹோத்சவ்

- "விவித்தா கா அம்ரித் மஹோத்சவ்" என்பது பல்வேறு பிராந்தியங்களின் மிகவும் தனித்துவமான மரபுகளை காட்சிப்படுத்தச் செய்வதன் மூலம் இந்தியாவின் பன்முகத் தன்மை கொண்ட பாரம்பரியத்தைக் கொண்டாடும் ஒரு வருடாந்திர கலாச்சார விழா ஆகும்.
- கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் விழாவானது, வடகிழக்கு இந்தியாவை ஒரு மையக் கருவாகக் கொண்டதாகும்.
- இரண்டாவது விழாவானது, லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி உட்பட கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் ஆந்திரா ஆகிய ஐந்து மாநிலங்களை உள்ளடக்கிய தென்னிந்தியாவை காட்சிப்படுத்துகிறது.




## இராஷ்ட்ரிய கர்மயோகி ஜன் சேவா திட்டம்

- மத்திய அரசானது, இராஷ்ட்ரிய கர்மயோகி ஜன் சேவா என்ற திட்டத்தின் முதல் பணித் தொகுதியைத் தொடங்கியுள்ளது.
- ஒரு தீர்வு சார்ந்த, மிகக் கனிவான மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட அரசு அதிகாரிகளிடையே மிகவும் வலுவான சேவா பவ் (சேவை மனப்பான்மை) உணர்வை

வளர்ப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டத்தில் நான்கு குறுகிய காலப் பயிற்சிச் சுற்றுகள் (ஒவ்வொன்றும் மிகவும் தோராயமாக 1.5 மணி நேரம்) உள்ளன.




# சர்வதேசச் செய்திகள்

## பிராந்திய 3R மற்றும் சுழற்சி முறைப் பொருளாதார மன்றம்




- ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான 12வது பிராந்திய 3R மற்றும் சுழற்சி முறைப் பொருளாதார மன்றம் ஆனது இந்தியாவின் ஜெய்ப்பூர் நகரில் நடைபெற்றது.
- ஆசிய-பசிபிக் பகுதியில் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகள் மற்றும் கார்பன்

நடுநிலைமை ஆகிய சில இலக்குகளை அடைவதற்காக சுழற்சி முறை செயல்பாட்டுச் சமூகங்களை ஈடுபடுத்துவது என்பதே இந்த நிகழ்வின் கருத்துருவாகும்.

- இந்த மன்றமானது, நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளுக்கான ஒரு செயல் திட்டத்தினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி (3R) கொள்கைகளில் மன்றம் கவனம் செலுத்தியது.
- இந்த மன்றமானது, இதற்கு முன்னதாக 2023 ஆம் ஆண்டில் கம்போடியா நாட்டில் நடத்தப் பட்டது.
- இதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் இந்தூரில் 8வது மன்றம் நடத்தப் பட்டது.
- உறுப்பினர் நாடுகள் 'ஜெய்ப்பூர் பிரகடனத்தை' ஒரு மனதாக ஏற்றுக் கொண்டதுடன் இந்த மன்றம் நிறைவடைந்தது.

## கேம்ப் ஹில் வைரஸ் – அமெரிக்கா





- அலபாமா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் ஒரு மர்மமான வைரஸ் ஆனது, அது கண்டுபிடிக்கப் பட்ட ஒரு சிறிய நகரத்தின் பெயரால் கேம்ப் ஹில் வைரஸ் என்று அழைக்கப் படுகிறது.
- வட அமெரிக்காவில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஹெனிபா வைரஸ் இது ஆகும்.
- 40% முதல் 75% வரையிலான உயிரிழப்பு விகிதம் கொண்ட ஹெனிபா வைரஸ்கள் அறிவியலுக்குத் தெரிந்த மிகவும் கொடிய வைரஸ்களில் ஒன்றாகும்.
- இந்த ஹெனிபா வைரஸ்கள் ஆனது வெளவால்கள், குதிரைகள், குரங்குகள், நாய்கள், பூனைகள் மற்றும் கொறித்துண்ணிகள் உள்ளிட்ட பல விலங்குகளைப் பாதிக்கக் கூடியது.
- தென்கிழக்கு ஆசியப் பகுதியில் தோன்றிய நிபா வைரஸ் மற்றும் ஆஸ்திரேலியாவில்

தோன்றிய ஹென்ட்ரா வைரஸ் போன்றவை முன்னதாக தோன்றிய ஹெனிபாவைரஸ் தொற்றுகளாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பெண்கள் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அமைப்பானது, "Women's Rights in Review 30 Years After" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ஐ.நா. பெண்கள் அமைப்பானது, பெய்ஜிங்+30 செயல்பாட்டு நிரலையும் வெளியிட்டு உள்ளது.
- பாலினச் சமத்துவத்தினை ஆதரிப்பதற்காக வேண்டி 1995 ஆம் ஆண்டு முதல் சுமார் 1,531 சட்டச் சீர்திருத்தங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஆண்கள் கொண்டுள்ள சட்ட உரிமைகளில் 64 சதவீதத்தை மட்டுமே பெண்கள் கொண்டுள்ளனர்.
- 88 சதவீத நாடுகளில் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான சட்டங்கள் இருந்தாலும், அவற்றின் அமலாக்கம் சீரற்றதாகவே உள்ளது மற்றும் முக்கியமானச் சேவைகளுக்கான நிதி உதவி போதுமானதாக இல்லை.
- பெண்கள், ஆண்களை விட சராசரியாக சுமார் 20 சதவீதம் குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர்.
- பெண்கள் தற்போது, உலகளாவியப் பாராளுமன்ற இடங்களில் 27 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளனர் என்ற நிலையில் இது 1995 ஆம் ஆண்டில் 11 சதவீதமாக இருந்தது.




# மாநிலச் செய்திகள்

## பஞ்சாப் – வேளாண் உள்கட்டமைப்பு நிதி திட்டம்

- வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF) திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழங்கிய 4,713 கோடி

ரூபாய் தொகையினையும் பஞ்சாப் மாநில அரசு பயன்படுத்தியுள்ளது.

- இதன் மூலம், இந்தத் திட்டத்தினை நன்கு செயல்படுத்துவதில் பஞ்சாப் மாநிலமானது இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- AIF ஆனது, அறுவடைக்குப் பிந்தைய ஒரு நிலைமையில் மிகத் தேவையான வேளாண் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு வேண்டி நடுத்தர மற்றும் நீண்ட கால நிதியுதவி வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டது.
- பிப்ரவரி 28 ஆம் தேதி நிலவரப்படி, 21,740 திட்டங்களுடன், அதிக எண்ணிக்கையிலான அனுமதிக்கப்பட்ட திட்டங்களைக் கொண்டு பஞ்சாபானது நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, தகுதியான கடன்களுக்கு 3% வட்டி மானியத்தை வழங்குகிறது.
- 2 கோடி ரூபாய் வரையிலான கடன்களுக்கு 7 ஆண்டுகளுக்கு அதிகபட்ச வட்டி விகிதம் 9% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## உத்தரகாண்டில் கம்பிவடப் போக்குவரத்துச் சேவைகள்


- உத்தரகாண்ட் மாநிலத்தில் கோவிந்த்காட் முதல் ஹேம்குண்ட் சாஹிப் ஜி (12.4 கி.மீ) மற்றும் சோன்பிரயாக் முதல் கேதார்நாத் (12.9 கி.மீ) வரையில் ஆகிய இரண்டு முக்கிய கம்பிவடப் போக்குவரத்து சேவைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பர்வத்மாலா பரியோஜனா எனப்படுகின்ற தேசியக் கம்பிவடப் போக்குவரத்து சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 7,000 கோடி ரூபாய் செலவில் இது கட்டமைக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது கடல் மட்டத்திலிருந்து 3,500 மீட்டருக்கு மேலான உயரத்தில் அமைந்துள்ள புனித

யாத்திரைத் தலங்களுக்கான பயண நேரத்தைக் குறைக்கும்.




## முக்கிய தினங்கள்

### உலக உடல் பருமன் தினம் - மார்ச் 03




- இது உடல் பருமன் பாதிப்பு, அதன் காரணங்கள் மற்றும் அதன் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது, 2015 ஆம் ஆண்டு முதல் உலக உடல் பருமன் கூட்டமைப்பினால் அனுசரிக்கப் பட்டு வருகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Changing System, Healthier Lives" என்பதாகும்.
- 2005-06 ஆம் ஆண்டில், 15 முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்களில் 13% பேரும், ஆண்களில் ஒன்பது சதவீதத்தினரும் அதிக எடை அல்லது உடல் பருமனாக இருந்தனர்.
- NFHS-4 தரவுகளின்படி, 2015-16 ஆம் ஆண்டில், 21% பெண்களும், 19% பேரும் அதிக எடை அல்லது உடல் பருமனாக இருந்தனர் (உடல் நிறை குறையீட்டு எண் 25.0 kg/m2).

### உலகப் பொறியியல் தினம் - மார்ச் 04

- 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் யுனெஸ்கோ அமைப்பானது இந்த ஒரு நாளை அறிவித்தது.

- பருவநிலை மாற்றத்தினை எதிர்த்துப் போராடுவதிலும் நிலையான மேம்பாட்டினை ஊக்குவிப்பதிலும் பொறியியலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதை இந்த நாள் மையமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Unleashing the power of engineers to advance the Sustainable Development Goals" என்பதாகும்.




## சர்வதேச ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதப் பரவல் தடுப்பு விழிப்புணர்வு தினம் - மார்ச் 05




- இது பொதுமக்களிடையே ஆயுதக் குறைப்பு பிரச்சினைகள் குறித்த சிறப்பான விழிப்பு உணர்வையும் புரிதலையும் ஊக்குவிக்க முயல்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை (UNGA) ஆனது, 2021 ஆம் ஆண்டில் இந்த முக்கியத்துவம் மிக்க நாளை நிறுவியது.
- இந்த நாள் ஆனது, அணுசக்தி, உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் உள்ளிட்ட பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களின் ஆபத்துகள் குறித்த பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

- ஐக்கிய நாடுகள் சபையானது, ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 முதல் 30 ஆம் தேதி வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் குறைப்பு வாரத்தையும் அனுசரிக்கிறது.

# இதரச் செய்திகள்


## இலங்காமலா சைவ சமய மையம் – ஆந்திரப் பிரதேசம்



- மைசூரில் உள்ள இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது, இலங்காமலா வனவிலங்கு சரணாலயத்தில் பண்டைய காலக் கல்வெட்டுகள் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய காலப் பாறை ஓவியங்களைக் கண்டறிந்துள்ளது.
- சித்தமாத்ரிகா, சங்கு எழுத்து வடிவம் மற்றும் தேவநாகரியில் எழுதப்பட்ட 12 சிட்டை / முத்திரைக் கல்வெட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- இவை கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும்
- வட இந்தியப் பகுதி பக்தர்கள் வருகை தரும் ஒரு முக்கிய சைவ யாத்திரை மையமாக இலங்காமாலா இருந்தது என்பதை இது குறிக்கிறது.
- அரிய சங்க எழுத்து வடிவங்களில் எழுதப்பட்ட 14 மற்றும் பிராமி எழுத்து வடிவில் எழுதப் பட்ட ஒன்று உட்பட சுமார் 15 கூடுதல் சிட்டைக் கல்வெட்டுகளை ஆய்வுக் குழு அடையாளம் கண்டுள்ளது.
- ஆக இராயலசீமா பகுதியில் சங்க எழுத்து வடிவங்களில் எழுதப்பட்ட கல்வெட்டுகளின் முதல் கண்டுபிடிப்பு இதுவாகும்.
- இது ஒரே பாறையில் செதுக்கப்பட்ட வகையில் இரு வெவ்வேறு காலக் கட்டங்களைச் சேர்ந்த 2 கல்வெட்டுகள் ஆகும்:
- இதில் பிராமி எழுத்து வடிவில் எழுதப்பட்ட 4 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஒன்று மற்றும் சங்க எழுத்து வடிவில் எழுதப் பட்ட சுமார் 6 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த மற்றொன்றும் உள்ளது.
- இது தென்னிந்தியாவில் எழுந்த எழுத்து வடிவப் பாணிகளின் பரிணாமம் பற்றிய சில நுண்ணறிவுகளை வழங்குகிறது.
- இந்தக் குழுவானது மூன்று பாறை உறைவிடங்களையும் கண்டறிந்துள்ளது, அவற்றில் ஒன்று வரலாற்றுக்கு முந்தையப் பாறை ஓவியங்களைக் கொண்டுள்ளது.

- இந்தத் தளம் ஆனது பெருங்கற்காலம் (இரும்பு வயது) மற்றும் முற்கால வரலாற்றுக் காலங்களுக்கு (கி.மு. 2500 – கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) முந்தையதாக நம்பப்படுகிறது.

## ஷிங்கிள்ஸ் நோய்




- பிப்ரவரி 24 முதல் மார்ச் 02 ஆம் தேதி வரையில் ஷிங்கிள்ஸ் நோய்/அக்கி அம்மை விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது.
- இக்கணக்கெடுப்பில் பங்கேற்ற 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட இந்தியர்களில் 56.6% பேருக்கு ஷிங்கிள்ஸ் நோய் பற்றி அதிகம் தகவல் அல்லது எந்த ஒரு தகவலும் தெரியவில்லை என்று ஒரு புதிய உலகளாவியக் கணக்கெடுப்பு கூறுகிறது.
- 50 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களில் சுமார் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்த வைரஸ் பாதிப்பினைக் கொண்டுள்ளதால், அவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படும் ஒரு அபாயத்தினைக் கொண்டுள்ளனர்.
- சின்னம்மையினை ஏற்படுத்தும் வைரஸான வெரிசெல்லா-ஜோஸ்டர் வைரஸ் (VZV) மீண்டும் எழுச்சி பெறுவதால் ஷிங்கிள்ஸ் நோய் ஏற்படுகிறது.
- ஷிங்கிள்ஸ் என்பது கடுமையான மற்றும் நீண்ட கால அளவில் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய ஒரு வலிமிகுந்த நோயாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★